Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 72 எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான் சங்.32:1. *ஏப்ரல் 2026* **No.4**

கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுதல்

Crucified with Christ

Jessie Penn - Lewis

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" கலா.2:20.

இந்த வார்த்தைகளில் கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட விடுதலையின் ஆழமான கருத்து அடங்கியுள்ளது. இந்த செய்தியை எவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்கிறோமோ அவ்வளவாக விரைவில் சிலுவையின் செய்தி விடுதலைக்கு தேவன் தந்த வல்லமை என்று நிரூபிப்போம்.

மனித வீழ்ச்சிக்குப்பின் 'நான்' என்பதுதான் எல்லாத் தீமைக்கும் மையமாயிருக்கிறது. பவுல் இந்த 'நான்' என்பதை கிறிஸ்துவோடு சிலுவையில் அறைந்துவிட்டதாகக் கூறுகிறார். அவர் கிறிஸ்துவுடன் மரித்துவிட்டார்.

நாம் தேவனால் நடத்தப்படும் போது சிலுவையின் செய்தி அகன்று கொண்டே சென்று ஆழமான தேவையை சந்திக்கிறது. முதலாவது நாம் நமது மரணத்தைக் கிறிஸ்துவோடு இணைத்துச் சொல்லும்போது அது பாவத்தோடுள்ள தொடர்புடன் கருதப்படுகிறது. ஆனால் விரைவிலோ தாமதமாகவோ நாம் ஒரு ஆழமான விடுதலை தேவை எனக் கண்டு கொள்கிறோம். நமது வாழ்வுகள் இன்னும் சுயநோக்குடையவைகளாகவே இருக்கின்றன. சுயம் தன்னை வெளிக் காட்டுகிறது. சேவையில் சுய சக்தியைக் காண்பிக்கிறோம். பாடுபடும்போது சுயபரிதாபம் கொள்கிறோம். மக்களது பாராட்டின் மூலம் சுயத்தை நாடுகிறவர்களாயிருக்கிறோம். சோதனைகள் வரும் போது சுயதீர்ப்புச் செய்கிறோம். பிறரோடுள்ள தொடர்பில் சுயஉணர்வுள்ளவர்களாயிருக்கிறோம். காயப்படுத்தப்படும் பொழுது சுயபாதுகாப்பு செய்து கொள்கிறோம். ஆம் சிலவேளைகளில் சுய உணர்வுள்ளவர்களாய் வாழ்க்கையை ஏறக்குறைய ஒரு பாரமாக்கி விடுகிறோம். இவையெல்லாம் நாம் சுயத்தை மையமாக்குவதின் விளைவுகளாகும்.

சுயத்திலிருந்து விடுதலை

இந்த நிலையில்தான் தேவ ஆவியானவர் **'சிலுவையின் வார்த்தையை'** நமக்கு புதிய ஆசீர்வாதமானதும் விடுதலையளிப்பதுமான செய்தியைத் தருகிறார். விடுதலை என்பது சிலரது வாழ்க்கையில் பாவத்தின் கட்டிலிருந்து விடுதலை பெறுவதைவிட அதிக விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

ஆண்டவராகிய இயேசு சிலுவைக்கு அழைக்கும்போது ஒவ்வொருவருடைய வாழ்விலுமுள்ள குழப்பத்தின் முக்கிய பகுதியையும் தொட்டார். "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" *(மாற்.8:34)* என்று கூறினார். அவர் அவர்களுடைய பாவங்களையோ வெளிப்படையான காரியங்களையோ எடுத்துக்கூறவில்லை. ஆனால் 'தன்னைத்தான் வெறுத்து' என்று மனிதனுடைய உள்ளான தன்மையைச் சுட்டிக்காட்டினார்.

ஒருவன் தன்னைத்தான் வெறுக்க வேண்டும். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டவனாக - கிறிஸ்துவைப் போல் ஆக வேண்டும். இருதயத்தில் இயேசுவுக்கு மையப்பகுதியை அளிக்க வேண்டும். அவ்வாறு எல்லாவற்றையும் அவருக்குக் கீழாக்க வேண்டும்.

இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும்

இயேசுவை நோக்கிப் பார்ப்பது தான் ஆவிக்குரிய வாழ்வில் விடுதலையின் பாதையாகும். கிறிஸ்துவை சிலுவையில் நாம் பார்க்கவேண்டும். இஸ்ரவேலர் கொள்ளிவாய் சர்ப்பங்களால் கடிக்கப்பட்டபோது மோசேயால் கம்பத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தது போல, நாமும் நம்மை நோக்குவதைவிட்டுவிட்டு, இரட்சிப்பின் கல்வாரியை நோக்க வேண்டும். அதை நோக்கிப் பார்த்தால் வாழ்வோம். மறுபடியும் பார்த்து நாம் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டு, விசுவாசத்தின் மூலம் அவரோடு இணைக்கப்பட்டு, பாவத்துக்கு மரித்து அது நம்மை ஆளாதபடி காத்துக் கொள்வோம். உத்தமமாக விரும்பி வெற்றியை எதிர்பார்ப்போம். தூய ஆவியானவர் நமது விசுவாசத்தை உண்மையான விடுதலையால் முத்திரையிடுவார்.

"கிறிஸ்துவோடு சிலுவையில் அறையுண்டேன்", அவரது சிலுவை என்னுடையது. நான் அங்கு அவரோடிருக்கிறேன். அவரது சிலுவைதனை பகிர்ந்து கொள்ள சம்மதிக்கிறேன். **'இனி நானல்ல'**. **"இனி எனக்கு தனிவாழ்வு இல்லை. நான் கிறிஸ்துவுடன் கலந்து விட்டேன்"**. எனவே ஜீவிக்கிற அவர் என் மூலம் அசைவாடி என்னில் கிரியை செய்வதால் அவரது பார்வையில் அது அதிகப் பிரியமாயிருக்கும்.

கிறிஸ்து உள்ளே வாசம் பண்ணுகிறார்

இதுவே சிலுவையின் முடிவு அல்லது நோக்கம். சிலுவையில் நாம் கிறிஸ்துவோடு அறையப்பட்டதால், அவர் நம் இருதயத்தில் வாசம் பண்ண விசுவாசத்தால் இடமளிக்கிறோம். பவுல் தமது சாட்சியை இவ்வாறு கூறுகிறார்: **"கிறிஸ்து என்னில் வாழுகிறார்"** அல்லது **"நான் கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டேன்"**. கிறிஸ்து நம்மில் வாழும் இரகசியம் அவருடைய மரணத்தில் உத்தம ஊன்று தலை சார்ந்திருக்கிறது. விசுவாசி இந்த முக்கிய விஷயமாகிய கல்வாரியும் தன்னுடைய செயல்முறை அனுபவம் என்பதையும் புரிந்துகொள்ளும்போது தேவனுடைய அனைத்து சத்தியங்களும் நம் வாழ்வில் நல்ல பலனையளிக்கும்.

வாழ்வின் எந்தக் குறிக்கோளும் விசுவாசிக்கு எட்டாத உயரமாயிருப்பதில்லை. ஏனெனில் ஆண்டவரே அதனை எட்ட அவர்களுக்கு உதவி செய்கிறார். தேவனுடைய எந்தக் கட்டளையும் சேவை செய்ய மிகப்பெரியதாக விசுவாசிக்கு இருப்பதில்லை. ஏனெனில் கிறிஸ்துவே அவர்களது வல்லமையுமாக அவர்களுக்குள் இருக்கிறார். அவர்கள் விசுவாசத்தோடு சிலுவைக்கு நேராக முன்னேறும்போது அவர்களில் வாசம் பண்ணும் கர்த்தரின் சார்பில் சேவையை நிறைவேற்ற முடியும். தேவனுடைய சக்தியே அவர்களுக்குள் வருகிறது. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் பெலத்தோடும் மகிழ்ச்சியோடும் அவனது வெளிப்பார்வையே மாறிவிடுகிறது. ஒரு இரகசியத்தை நான் அறிந்துக்கொண்டேன், **"என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு"** பிலி.4:12,13. எனவே எனது வெற்றி முழக்கம், **"கிறிஸ்து எனக்கு ஜீவன்"** (பிலி.1:21) என்பதாகும். இன்னும் அதிகமான சந்தோஷம் என்னவென்றால், "கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் நான் சொல்லத்துணிவதில்லை" ரோம.*15:18.* எளியசாட்சி என்னவெனில், "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" கொலோ.*1:29.* இதுவே ஒவ்வொருநாளும் சேவையை வலுப்படுத்தும் ஆவி.

(4-ம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

2 நாளாகமம் 7:14

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்

சங்கீதம் 91:15.

ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2026 ஏப்ரல் *மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.*

Online

ஆன்லைன் வழியாக காணிக்கை அனுப்பினால் தயவாய் உடனே தகவல் தாருங்கள். இது உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும்.

7 நாட்களுக்குள் ரசீது வரத்தவறினால் தயவாய் தகவல் தாருங்கள்.

மணியாடர்

உங்களுக்கு எந்த பெயரில், எந்த முகவரியில் பத்திரிகை வருகிறதோ அதே பெயரில், முகவரியில் மணியாடர் அனுப்புங்கள். உங்கள் பதிவு எண்ணையும் தயவாய் எழுதுங்கள். உதாரணமாக சென்னை வாசகர்கள் CN 00001, குமரி வாசகர்கள் KK 00001 என்று எழுதுங்கள்.

eMO Message : செய்திகள், ஜெபக்குறிப்புகள் எழுதுங்கள்.
Reference : TR, CB, VN, TN, போன்ற உங்கள் பதிவு எண்ணை தயவாய் எழுதுங்கள், நன்றி.

இந்தியா இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்

(மாதம் முழுவதும் 31 நாட்களும் ஜெபிப்பதற்காக **ஜெப கையேடு** அச்சிட்டு வருகிறோம். அதில் அச்சிடப்பட்டுள்ள 31 ஜெபக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் வெளியிடுகிறோம்)

தேதி 4

பீஹார் (Bihar)

ஜெபியுங்கள் : முதலமைச்சர், அமைச்சர்களுக்காக, M.P., M.L.A., IAS, IPS அதிகாரிகளுக்காக, நீதித்துறை, காவல்துறை, வழக்குரைஞர்களுக்காக, ஆளுநர், மாவட்ட ஆட்சியர்களுக்காக.

2011 மக்கள் தொகை	: 10,40,99,452
2025 கணிக்கப்பட்டதொகை	: 13.43 கோடி
மாவட்டங்கள்	: 38
கிராமங்கள்	: 44,874
2011 கிறிஸ்தவர்கள்	: 0.12%
2025 கிறிஸ்தவர்கள்	: 0.12%
மக்கள் இனங்கள்	: பூமிஹார், அஹிர், ராஜ்புட், குர்மி, கொய்ரி, அன்சாரி

2026 **இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் மாற்கு 9:23.**

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0438700**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

ஜெபக்குறிப்புகள்:

1. நக்ஸல்பாரி, தலீத் சேனா, யாதவ் சேனா, மாவோயிஸ்ட் போன்ற தனியார் படைகளின் அதிகரிப்பினால் ஏற்படும் தொல்லைகள் நீங்க ஜெபிப்போம்.
2. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நீங்க ஜெபிப்போம்.
3. முன்னேற்றமே இல்லாத ஒரு மாநிலம் என்னும் நிலைமை மாற ஜெபிப்போம்.
4. லஞ்ச ஊழல் மாறத்தக்கதாக ஜெபிப்போம்.
5. 0.1% கிறிஸ்தவர்கள் உயிரடைந்து மாநிலத்தை அசைக்க ஜெபிப்போம்.

விசேஷ ஜெபக்குறிப்பு

நியு-ஏஜ் இயக்கம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? கிறிஸ்தவ விசுவாசத்தை வேட்டையாடுவதையே தங்கள் முக்கியப் பணியாகக் கொண்டு செயலாற்றும் ஒரு பலமான அமைப்பு இது. 1950-ம் வருடத்தில்தான் இந்த நியு-ஏஜ் இயக்கம் வித்திடப்பட்டது.

கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவத்திற்கும் விரோதமான கொள்கைகளை உருவாக்கி, இதுதான் உண்மையான கிறிஸ்தவம் அல்லது நவீனக் கிறிஸ்தவம் என்று கிறிஸ்தவர்களுக்கு நடுவில் இதை அறிமுகம் செய்து வைக்கிறார்கள். இளைஞர்கள் மாத்திரமல்ல, ஏராளம் ஊழியர்களும், ஊழிய ஸ்தாபனங்களும், சபைகளும் கூட இவர்களுடைய நவீனக் கிறிஸ்தவக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் கவலை தரும் விஷயம்.

நியு-ஏஜ் இயக்கத்தார் நடத்தும் சபைகளும், இந்தக் கொள்கைகளைப் பின்பற்றும் ஊழியர்கள் நடத்தும் ஆராதனைகளும் வித்தியாசமானவை. தெய்வீகத் தன்மையோ, பரிசுத்தமோ இல்லாதவை. ஏறத்தாழ ஆபாச அசைவுகளை உள்ளடக்கிய நடனங்கள், இருபாலாரும் வித்தியாசமின்றி நடத்தும் கெட்-டு-கெதர் ஆராதனைகள், இவர்கள் ஆடவும், வெறி கொண்டவர்கள் போல ஆராதிக்கவும் ஏற்ற இசையமைப்புடன் கூடிய பாடல்கள், வசனம் சொல்லாத புதிய முறை ஆராதனைகள் போன்றவை இவர்களுடைய அடையாளங்கள்.

சிறப்புச் செய்தி

7 அக்கினி

பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன் லூக்கா 12:49.

IV. கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி 1 இராஜாக்கள் 18:38

[இம்மாத செய்தியை நான் எழுதவில்லை. தேவனுடைய மனிதர் **லியோனார்டு ரேவன்ஹில்** அவர்கள், **"எழும்புதல் தாமதிப்பது ஏன்?"** என்ற புத்தகத்தில் எழுதிய மிக அருமையான அத்தியாயம் நான்கு அச்சிடப்படுகிறது]

தேவனுடைய எலியாக்கள் எங்கே?

"எலியாவின் தேவன் எங்கே?" *என்ற கேள்விக்கு, 'அவர் எப்போதும் இருக்கும் சிம்மாசனத்தில்தான் இருக்கிறார்' என்று நாம் பதிலளித்து, 'ஆனால் தேவனுடைய எலியாக்கள் எங்கே?' என்று திருப்பிக் கேட்கிறோம்.*

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எலியா "நம்மைப் போல் பாடுள்ள மனுஷனாயிருந்தான்" என்று நாமறிவோம். ஆனால், அந்தோ! நாம் அவனைப்போல் ஜெபிக்கும் மனிதராய் இல்லை. ஜெபிக்கும் ஒரு மனிதன் தேவனுக்குப் போதும். இன்று தேவன் மனிதரைக் கடந்து செல்கிறார். காரணம் அவர்கள் அறியாமலிருக்கிறதினாலல்ல, அதிகம் அறிந்திருக்கிறதினாலேயே! சகோதரரே, நமது திறமைகளே நமக்கு இடையூறுகளாகவும், நமது தாலந்துகளே நமக்குத் தடைகளாயுமிருக்கின்றன.

எலியா ஒளிப்பிடத்திலிருந்து பழைய ஏற்பாட்டு மேடைக்கு முழு வளர்ச்சியடைந்த மனிதனாக வந்தான். பாதாளத்தின் மகளான யேசபேல் தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றொழித்து, அவர்களுக்குப் பதிலாக பொய்த் தேவர்களுக்குத் தோப்புகளை வைத்தாள். இருள் அந்த நாட்டையும், காரிருள் அந்த மக்களையும் சூழ்ந்தது. அவர்கள் அநீதியைத் தண்ணீரைப்போல் பருகினார்கள். அந்நாடு அஞ்ஞானிகளின் ஆலயங்களாலும், விக்கிரகங்களுக்குரிய சடங்குகளாலும் துர்நாற்றமெடுத்தது. கொடுமையான ஆயிரக்கணக்கான பலி பீடங்களிலிருந்து புகை மேற்கிளம்புவதை அந்நாடு பார்த்து நின்றது.

இவை யாவும் ஆபிரகாம் எங்கள் தகப்பனென்று சொல்லிக் கொண்ட மக்களிடையே நடைபெற்றன. அவர்களுடைய முற்பிதாக்கள்தான் துன்ப காலத்தில் கர்த்தரை நோக்கி முறையிட்டு தங்களுடைய எல்லா இடுக்கண்களிலிருந்தும் தேவனால் விடுவிக்கப்பட்டவர்கள். இப்போதோ மகிமையின் தேவனை விட்டு அவர்கள் எவ்வளவாய் அகன்று விட்டனர்! உப்பு தன் சாரத்தை இழந்து விட்டதே! பொன் மங்கிப் போயிற்றே! அளவுக்கு மீறிய இந்த பின்மாற்ற சூழ்நிலையில் **தேவன் ஒரு மனிதனை-ஒரு குழுவையல்ல, ஒரு கூட்டத்தையல்ல, ஒரு தூதனையல்ல-ஆனால் ஒரு மனிதனை-நம்மைப் போல் பாடுள்ள ஒரு மனிதனை, எழுப்பினார். *தேவன் ஒரு மனிதனைத் தேடியது பிரசங்கிக்க அல்ல, பிளப்பிலே திற்க!*** (திறப்பிலே) ஆபிரகாமைப் போல இப்போது எலியா தேவனுக்கு முன்பாக நின்றான். எனவே பரிசுத்த ஆவியானவர் எலியாவின் வாழ்க்கையை "***அவன் ஜெபித்தான்***" என்று இரண்டே வார்த்தைகளில் எழுத முடிந்தது. தேவனுக்கோ, மனிதருக்கோ இதைவிட அதிகமாக எந்த மனிதனும் செய்ய முடியாது. இன்று சபையில் ஆலோசனை கூறுவோரின் எண்ணிக்கை அளவுக்கு அழுது புலம்புவோர் இருந்தால் ஓராண்டிற்குள் எழுப்புதல் வந்து விடும்!

இப்படிப்பட்ட ஜெபிக்கும் மனிதர்களே எப்போதும் நாட்டுக்கு நன்மை செய்பவர்கள். எலியாவும் அப்படியே. அவன் கேட்டது பரலோகக் குரல்; கண்டது பரம தரிசனம்; ருசித்தது வல்லமை; எடைபோட்டது எதிரியை; துணைகொண்டது தேவனை; பெற்றது அமோக வெற்றி! அவன் சிந்திய கண்ணீர், சகித்த ஆத்தும வேதனை, விட்ட பெருமூச்சுகள், இவையெல்லாம் தேவனுடைய தொகுப்புப் புத்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. முடிவில் தவறாத தீர்க்கதரிசனம் உரைக்க வெளி வந்தான். தேவனுடைய இருதயம் அவனுக்குத் தெரியும். எனவே **அவன் - ஒரு தனி மனிதனாக - ஒரு நாட்டை** அடக்கி இருந்த நிலவரத்தையே மாற்றிவிட்டான். '***செங்குத்துப்பாறை***' போன்ற அவன் கீலேயாத்தின் மலைகளைப் போன்று கெம்பீரமாகவும் அசையாமலும் நின்று ஒரு வார்த்தையினால் வானத்தை அடைத்தான். எல்லாப் பூட்டுக்கும் பொருந்தும் விசுவாசமென்னும் சாவியினால் எலியா வானத்தைப் பூட்டி, சாவியைப் பையில் போட்டுக்கொண்டு, ஆகாபை நடுங்கச் செய்து விட்டான். **தேவன் ஒரு மனிதனைப் பிடித்துக் கொள்ளுவது அருமையானது; ஆனால் மனிதன் தேவனைப் பற்றிப் பிடித்துக் கொள்வது அதிலும் அருமையானது.** ஒரு தேவமனிதன் "***ஆவிக்குள்***" பெருமூச்சு விடட்டும்; அப்பொழுது தேவன் "***என்னை விட்டுவிடு***" என்று கதறுவார். எலியாவைப் போல நாமும் சாதிக்க விரும்புகிறோம், ஆனால் அவனைப் போல் துன்பங்களைச் சகிக்கவோ விரும்புவதில்லை!

சகோதரரே, நாம் தேவனுடைய ஊழியத்தை, தேவனுடைய முறையில், தேவனுடைய வேளையில், தேவனுடைய வல்லமையோடு செய்வோமானால் நமக்குக்கிடைப்பது தேவனுடைய ஆசீர்வாதமும், பிசாசின் சாபங்களும்! நம்மை ஆசீர்வதிக்க தேவன் பரலோகத்தின் பலகணிகளைத் திறக்கும்போது, நம்மை அழிக்க பிசாசு பாதாளத்தின் வாசலைத் திறப்பான். தேவன் புன்னகை செய்வாரானால் பிசாசு முகம் சுழிப்பான். சாதாரண பிரசங்கிகள் எவருக்கும் உதவி செய்யலாம், ஆனால் எவரையும் புண்படுத்தமாட்டார்கள்; தீர்க்கதரிசிகளோ யாவரையும் கலக்கி அதிரச் செய்துவிடுவார்கள். பிரசங்கி கும்பலோடு செல்லலாம்; தீர்க்கதரிசியோ அதற்கு எதிர்த்துச் செல்லுவான். தேவனால் அழைக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, அனுப்பப்பட்டவன் நாட்டின் பாவங்களைக் கண்டித்துப் பேசுவதால் தேசத்துரோகியென்றும், அவனுடைய நாவு இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போலிருப்பதால் கருணையற்றவனென்றும், அவனுடைய பிரசங்கத்தை மெச்சுவோர் அதிகமில்லையாதலால் சமநிலையற்றவனென்றும் பட்டம் வாங்குவான். **பிரசங்கியின் வருகை முன்னறிவிக்கப்படும். தீர்க்கதரிசியின் வருகையோ முன்னெதிர்க்கப்படும்.**

ஆ! உடன் ஊழியரே, லுத்தர், பன்யன், வெஸ்லி முதலிய பரிசுத்த வான்களையும், சீர்திருத்தவாதிகளையும், இரத்தச் சாட்சிகளையும் நாம் நேசிக்கிறோம். நாம் அவர்களுடைய வாழ்கை வரலாறுகளை எழுதுகிறோம். அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம். அவர்களின் சமாதி வாசகத்தைச் சட்டமிடுகிறோம். அவர்களுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்புகிறோம் - அவர்களைப் பின்பற்றுவதைத் தவிர மற்றெல்லாவற்றையும் செய்கிறோம்! நாம் அவர்களின் கடைசித்துளி இரத்தத்தைக் கண்டுகளிக்கிறோம். நமது இரத்தத்தின் முதல் துளியையோ கவனமாகக் காத்து கொள்ளுகிறோம்!

யோவான் ஸ்நானன் ஆறுமாதம் சிறைக்குத் தப்பியது பெரிய காரியம். அவனும் எலியாவும் இன்றையப் பட்டண வீதிகளில் ஆறுவாரங்கள்கூடத் தாக்குப்பிடிக்க மாட்டார்கள். பாவத்தைக் கண்டனம் செய்ததற்காகவும், மழுப்பாமல் பிரசங்கித்ததற்காவும் உடனே அவர்கள் சிறைக்கோ அல்லது மனநோய் விடுதிக்கோ அனுப்பப்பட்டிருப்பார்கள்.

இன்றைய சுவிசேஷகர்கள் கம்யூனிசத்தின் பலத்தை, கண்களை அகல விரித்துக்கவனிக்கின்றனர். ஆனால் ரோமச் சபையின் பயங்கரத்தைக் குறித்துப்பேச வாய்திறப்பதில்லை. மனிதர்களின் ஆத்துமாக்களைக் கெடுக்கும் பாதிரிகள், விக்கிரகாராதனைக்கும்பல், கல்வாரியைக் கவனியாது மரியாளிடம் மன்றாடி, லூசிபரின் ஏமாற்றங்களிலெல்லாம் மிகப்பெரிய இந்த ஏமாற்றத்தால் வாழ்விலும் சாவிலும் ஏமாற்றப்பட்டுள்ள லட்சக்கணக்கானோர்! இவையெல்லாம் நமக்குக் கவலையில்லை. இதைப் போன்ற சூழ்நிலையில் இருந்த எலியா ஜெபித்ததைப் போல் கண்ணீரோடும் பக்தி வைராக்கியத்தோடும் நாம் ஜெபிப்பதில்லை. வெள்ளம்போல் சத்துரு வந்துள்ளான்; அவனுக்கு எதிராகக் கொடியேற்ற தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்ட, ஆவியினால் நிறைந்த ஒரு மனிதன் இல்லையோ? இருதயத்தில் தாகத்தையும், கண்களில் தரிசனத்தையும் பாதுகாக்க கூடிய இடம் ஒன்றே - அதுதான் ஜெபப் பலிபீடம். எரிமலை போன்ற இருதயத்துடனும், இடியோசை போன்ற குரலுடனும் இந்த மனிதனாகிய எலியா தக்க சமயத்தில் தேவராஜ்யத்தின் ஊழியத்திற்கு முன்வந்தான்.

உலக சுவிசேஷ ஊழியத்திற்குத் தடைகள் அநேகம் உண்டு. அசையா மனங்கொண்ட மனிதர் முன்பாக இவைகள் மறைந்துவிடும்.

"கடக்கவியலா ஆறுகள் உண்டோ?
குடையவியலா மலைகள் உண்டோ?
இயலாத செயல்களையும் இறைவன் எளிதாய்ச் செய்வார்.
எவ்வல்லமையும் செயற்கரியதைச் செய்வார் அவரே."

இதற்குக் கிரயம் அதிகம். நம்மோடு பங்காளியாக இருக்க அல்ல; நம்மைச் சொந்தமாக்கிக் கொள்ளவே தேவன் விரும்புகிறார்.

எலியா தேவனோடு சஞ்சரித்தான். அவன் ***தேவனைப் போலவே*** தேசத்தின் பாவத்தைப் பற்றிச் சிந்தித்தான்; ***தேவனைப்போலவே*** பாவத்தைக் கண்டுதுக்கித்தான்; ***தேவனைப் போலவே*** பாவத்திற்கு எதிராகக் குரலெழுப்பினான். அவன் ஊக்கமாய்க் கண்டித்தான். அவன் தட்டிக்கொடுத்துப் பிரசங்கிக்கமாட்டான். உருகி நிற்கும் உலோகம் உடலில் படு

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வதைப்போல் அவனுடைய வார்த்தைகள் மனிதரின் இருதயத்தில் பட்டன.

ஆனால், "**நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்**" சங்.37:23. கர்த்தர் எலியாவை நோக்கி, "***ஒளித்துக் கொண்டிரு***" என்றும், பின்னர் மீண்டும், "***உன்னைக் காண்பி***" என்றும் சொன்னார். இராஜாக்களைக் கடிந்து கொண்டிருக்க வேண்டிய வேளைகளில் நாம் ஒளிந்து கொண்டிருப்பது தவறாகும்; அப்படியே காத்திருக்கும்படி ஆவியானவர் ஏவும் போது நாம் பிரசங்கிப்பதும் தவறாகும். "என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு" *(சங்.62:5)* என்று சொல்ல தாவீதைப் போல் நாமும் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மைத் தாங்குபவற்றையெல்லாம் தள்ளிப் போடும்படி தேவனை அழைக்க நம்மில் யாருக்குதைரிய முண்டு? தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளல்ல. அவருடைய வழிகள் "ஆராயப்படாதவைகள்". ஆனால் அவர் அவைகளை அவருடைய ஆவியானவர் மூலம் நமக்கு வெளிப்படுத்துகிறார். தேவன் எலியாவை முதலாவது கேரீத்துக்கும், பின்னர் சாரிபாத்துக்கும் போகக் கட்டளையிட்டது ஆடம்பரமான அறையில் தங்குவதற்காகவா? இல்லை! இல்லவே இல்லை! தேவனுடைய இந்தத் தீர்க்கதரிசி, நீதியைப் பிரசங்கிக்கும் இவன், தரித்திரமான ஒரு விதவையின் வீட்டில் தங்குமாறு கர்த்தரிடம் கட்டளை பெற்றான்!

பின்னர், கர்மேல் பர்வதத்தில் எலியா செய்த ஜெபம் சிறிய ஜெபங்களிலெல்லாம் பெரியது. "**கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்**" 1இரா. 18:37. பொதுவிடங்களில் செய்யப்படும் சிறிய ஆனால் சீரிய ஜெபங்கள் மறைவிடங்களில் செய்யப்படும் நீண்ட ஜெபங்களின் பலன் என்று **E.M. பவுண்ட்ஸ்** என்ற பக்தன் சரியாகச் சொன்னார். எலியா ஜெபித்தது விக்கிரகாராதனை செய்யும் பூசாரிகள் அழிக்கப்படவோ இரண்டகம் பண்ணும் இஸ்ரவேலரைப் பட்சிக்கப் பரத்திலிருந்து இடிமுழக்கங்கள் அனுப்பப்படவோ அல்ல; ஆனால் தேவனுடைய மகிமையும், வல்லமையும் வெளிப்பட வேண்டுமென்பதே அவனது ஜெபம்.

சில சமயங்களில் தேவனுக்கே நாம் உதவிசெய்ய முயற்சிக்கிறோம். ஆபிரகாம் இப்படிச் செய்ய முயற்சித்ததின் பலன்தான் பூமி இந்நாள்வரையிலும் இஸ்மவேலின் காரியத்தினால் சபிக்கப்பட்டிருக்கிறது. இதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மாறாக, எலியாவோ காரியத்தைக் கர்த்தருக்கு எவ்வளவு கடினமாக்க முடியுமோ அவ்வளவு கடினமாக்கினான். அவனுக்கு அக்கினி தேவைப்பட்டது; ஆனால் பலியைத் தண்ணீரால் நனைத்தான். நமது ஜெபங்களிலும் இவ்விதப் பரிசுத்த தைரியத்தைத் தேவன் மெச்சுகிறார். "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" சங்.2:8.

ஆ! உடன் ஊழியரே, நமது ஜெபத்தின் பெரும்பகுதி தேவனுக்கு ஆலோசனை சொல்லுவதாகவே இருக்கிறது. நமது ஜெபம் நமக்கோ அல்லது நமது சபைப் பிரிவுக்கோ உரிய பேராசையினால் வண்ணமிழந்து காணப்படுகிறது. வேண்டாம் இந்த ஆசை! நமது நோக்கமெல்லாம் '***தேவன்***' என்று மட்டுமே இருக்கவேண்டும். ஏனென்றால் அவருடைய கீர்த்தியே கறைப்படுத்தப்படுகிறது; அவருடைய செல்லக் குமாரனே அசட்டை செய்யப்படுகிறார்; அவருடைய பிரமாணங்களே மீறப்படுகின்றன; அவருடைய நாமமே நிந்திக்கப்படுகிறது; அவருடைய வேதமே மறக்கப்படுகிறது; அவருடைய வீடே சமுதாயத் தொண்டுகளின் வித்தைக்கூடமாக்கப்பட்டுவிட்டது.

தமது மக்கள் ஜெபிக்கும்போது தான் தேவனுக்கு அதிகப் பொறுமை தேவைப்படுகிறது. அவர் என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் அவருக்குச் சொல்லுகிறோம். நியாயந்தீர்த்தலும் பாராட்டுதலும் ஜெபத்தில்தான். சுருங்கக் கூறின், ஜெபிக்கிறோம் என்று சொல்லும்போது ஜெபிப்பதைத் தவிர மற்றெல்லாவற்றையும் நாம் செய்கிறோம். வேதாகமப் பள்ளி எதுவும் இக்கலையை நமக்குக் கற்றுத்தர இயலாது. தனது பாடப் பயிற்சித் திட்டத்தில் ஜெபத்திற்கு என்று ஒரு தனிப்பகுதி அளித்துள்ள வேத கலாசாலை எது? நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமானது வேதத்தில் ஜெபத்தைப் பற்றி எழுதப்பட்டிருப்பதே. ஆனால் இது எங்கே கற்பிக்கப்படுகிறது? கடைசிக்குட்டையும் நாம் உடைத்துவிட்டு, நம்முடைய தலைவர்களிலும், ஆசிரியர்களிலும் பலர் ஜெபிப்பதில்லை, கண்ணீர் சிந்துவதில்லையென்று உரக்கக் கூறுவோம். தாங்களே அறியாததை அவர்கள் கற்பிக்க முடியுமா?

விசுவாசிகளை ஜெபிக்க வைக்கக் கூடிய மனிதனே இதுவரை உலகம் காணா மிகப்பெரிய எழுப்புதலை தேவனுடைய உதவியால் கொண்டுவருவான். தேவனில் தவறு ஏதுமில்லை. அவரால் எல்லாம் கூடும். "**நமக்குள் கிரியை செய்கிற வல்லமையின்படியே**" செய்ய அவர் வல்லவர். தேவனுடைய இன்றையக் கவலைக் **கம்யூனிசமோ, ரோம மார்க்கமோ, மிதவாதமோ, நவீனவாதமோ அல்ல**; அவரது கவலையெல்லாம் **அடிப்படைச் சத்தியங்களை விசுவாசிக்கிறோம் என்று சொல்லியும் செத்த நிலையிலுள்ள மார்க்கமே!**

* * * * *

7 ஆண்டுகளாக, ஆண்டு காணிக்கை **ரூபாய் 500** அனுப்புங்கள் என்று எழுதி வருகிறேன். வாசகரில் சிலர் இதை கவனிப்பதில்லை. இந்த ஆண்டும் ரூபாய் *100, 200, 250,300* என்று அனுப்பியிருக்கிறார்கள்.

வரும் நாட்களில் குறைந்த பட்சம் ரூபாய் *500* அனுப்புங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக
தேவ கிருபை உங்களோடிருப்பதாக

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவாய் உடனே தெரிவியுங்கள்.
பத்திரிகை வரத்தவறினாலும் தகவல் தாருங்கள், உடனே அனுப்புவோம்.

Mobile: **95432 21008**
Whatsapp: **94897 40295**
e-mail: **varukayinthoothan@hotmail.com**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுதல்

ஆசீர்வாதமான வாழ்வே! எவ்வளவு இளைப்பாறுதலான, சந்தோஷமும் விடுதலையுமான வாழ்வு! இதற்கான இரகசியத்தை அறிய வேண்டும். ஆத்துமா தேவகுமாரனைப் பற்றும் விசுவாசத்தில் வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

நான் இப்பொழுது விடுதலை பெற்றவன். சுய உணர்ச்சி, சுயநாட்டம், சுய அன்பு போன்றவைகளால் ஒரு நடுநிலை வாழ்வு வாழ்கிறவனல்ல. இப்போது என்னில் வாழ்ந்து கொண்டிருக்கிற கிறிஸ்துவின் அன்புக்கும் சாட்சியான வாகனமாக துரிதமாக ஓடிக் கொண்டிருக்கிறேன். இது என்னுடைய ஜீவனல்ல. எனது உள்ளத்தில் வாசம் செய்யும் கிறிஸ்துவிலிருந்து எனது வழியாகப் பாய்ந்து வரும் ஜீவன். "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; .... இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதானே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" கலா. 2:20.

கிறிஸ்துவோடு அறையப்பட்ட வாழ்வின் ஆசீர்வாதமான நிரூபணம் நான் என்பது ஆத்துமாவின் பார்வையிலுள்ள மண்டலத்திலிருந்து கடந்து செல்கிறது. தேவகுமாரனின் சிலுவை மரணத்தால் காண்பித்த மிகப் பெரிய அன்பு இருதயத்தையும் உள்ளத்தையும் முழுமையாக நிரப்பிவிடுகிறது.

"அவர்தம்மை எனக்காக அளித்து விட்டார்" என்பதே வாழ்வின் மேலான சிந்தனையாகிவிடுகிறது. எல்லாமே கல்வாரியின் ஒளியிலும் அன்பிலும் காணப்படுகின்றன. ஆணிகள் கடாவப்பட்டு கைவிடப்பட்டு மரித்த அவர் நமக்குத் தருவது மிக இனிமையான மகிழ்ச்சியைத் தவிர வேறொன்றையும் இல்லை. மேலும் அவரது அன்பினால் கிடைத்த சிலாக்கியத்தில் மூழ்கியிருக்கும் ஒருவரின், அவர் மீதான விசுவாசம், ஆத்துமாவின் பரவச தன்மையாக மாறிவிடுகிறது. விசுவாசி தனது சொந்த அனுபவங்கள் பாரங்கள் எவற்றைக் குறித்தும் இனி கவலைப்படுவதில்லை. இப்போது தனக்காக மரித்த ஆண்டவர் அவரது கல்வாரி பாடுகளின் பலனைக் கண்டு திருப்தியடைய வேண்டும் என்ற ஆழ்ந்த வாஞ்சையோடு ஏங்குகிறார்.

நம்மோடு பங்காளியாக இருக்க அல்ல; நம்மைச் சொந்தமாக்கிக் கொள்ளவே தேவன் விரும்புகிறார்.

தேவனுடைய சால்வை – ஆவியும் வல்லமையும்

The mantle of God - The spirit and power

Robert Boyd Munger (1910 -2001)

"அவர்கள் அக்கரைப்பட்ட பின்பு ... அதற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னைவிட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான்" 2இராஜா.2:9,10.

இது ஒரு கடினமான காரியம். இது மிகமிக கடினமானது. எலிசா கேட்டது மனுஷரால் கூடாததான ஒரு அசாதாரணமான காரியம். அவனது வேண்டுதல் ஏமாற்றத்தோடு ஏறெடுக்கப் படவில்லை. அதிக தேவையோடு ஏறெடுக்கப்பட்டது. இந்த அரிதான காரியம் அவனுக்குத் தேவையாயிருந்தது.

தேசம் விக்கிரகாராதனையில் மூழ்கி, சன்மார்க்க சீரழிவுக்குள் கிடந்தது. உயரிய அதன் பாரம்பரியம் தாழ்வு நிலைக்கு வந்துவிட்டது. எந்த மனித சாதூரியமும் அவர்களது மந்த மனதை மாற்ற முடியாது. மனித வல்லமை, எந்த ஸ்தாபனத்தின் முயற்சி, அல்லது திட்டங்கள், விழிப்புணர்வு முயற்சிகள் எதுவுமே அவர்கள் கடின இருதயத்தை உடைக்க முடியவில்லை.

இளைஞனான இந்த தீர்க்கன் ஆழமான பாவக்குழியிலும் அக்கிரமத்தின் பிடியிலும் இருந்த தேசம் நீதி நிறைந்த தேவனுக்கு நேராக சுயமுயற்சியால் அழைக்கப்படுவது, அடிக்கும் புயல் மத்தியில் குழந்தையின் மெல்லிய குரல் போலவும், பிள்ளையின் கரம் கோட்டையின்மீது படுவது போலவுமே இருக்கும். நிச்சயமாகவே அவன் கேட்டது மிகவும் கடினமான ஒரு காரியம்.

நம்பிக்கையற்ற நிலையில் பிறந்த ஜெபம்

இது அரிதான காரியங்களை தேவ ஊழியக்காரர்கள் தேவனிடம் கேட்கவேண்டிய காலம். அதாவது தூய ஆவியானவரின் இருமடங்கு நமக்கு தேவை. எலிசாதனது காலத்தில் தெய்வீக தைரியம் மற்றும் வல்லமை ஆகிய வற்றின் இருமடங்கைக் கேட்டிருந்தால் நமது தேவை எத்தனை அதிகம்?

சபை இன்று சீர்திருத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு, அதன் பங்குதாரர்களாகிய நாம் நமது பழைய மானிட, மாம்சீக, போர்வை களைக் களைந்துவிட்டு எலிசாவைப் போல தேவனுடைய போர்வையை தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனால் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆவியையும் வல்லமையையும் பெறலாம்.

சத்திய வசனத்தைப் பிரசங்கிப் பதும், போதிப்பதும் போதுமானதல்ல. விசுவாசத்தில் திருப்தி போதாது. கடின மாக உழைப்பதும், சேவை செய்வதும், தியாகமும் போதாது. ஒருவரது ஜீவனை தேவனுக்காகக் கொடுப்பது அதாவது ஜீவ பலியாக நம்மை அர்ப்பணிப்பது, கிறிஸ்துவின் நாமத்துக்காகப் பாடு படுவது, அல்லது உலகத்தின் முடிவு வரை செல்வதும் போதாது. நமது உதடு களிலுள்ள சத்தியமும், நமது இருதயங் களிலுள்ள தியானமும் தூய ஆவியான வரின் ஜீவனுள்ள வல்லமையால் உயிர்ப் பிக்கப்படவேண்டும்.

நமது மனப்போங்குகளும் மற்றும் கிரியைகளும்

பாரம்பரியமாக வேதபுத்தகத்தை விசுவாசிக்கிற கிறிஸ்தவர்கள் அடிக்கடி மொத்த அனுமானம் என்ற தவறு இழைக்கிறார்கள். நமது மனப்போங்கு களும் செயல்களும் நமது உத்தம சுவிசேஷ அறிவிப்பும், கிறிஸ்துவுக்கான அர்ப்பணமும் எதிர்க்கும் இதயங்களை யும் இரட்சகரை கனம் பண்ணவும் போது மானது என்று எண்ணச் செய்கிறது. நமது முடிவுள்ள மூளையும் எளிய முயற்சி களும் தவறான பக்தியும் நித்திய சுவிசேஷத்தின் மீட்கும் வல்லமையை அறிவிக்கப் போதுமானது என்ற அபிப்பி ராயம் எங்கிருந்து வந்தது?

சார்லஸ் ஹேடன் ஸ்பர்ஜன் இந்தக் கருத்தைச் சொல்லுகிறார்: சொல்லுகிற பிரசங்கம் அடிக்கடி பாரம்பரியமானதா யிருக்கிறது. - பிடிவாதமாகவும், மீறத் தகாத பாரம்பரியமாகவுமிருக்கிறது. கிறிஸ்தவ ஒழுங்குப்படி அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியின் அபிஷேக மாகவும் ஒருவரை தேவபணிக்காக ஆயத்தப்படுத்துவதுமாகும். இந்த அபிஷேகம் தெய்வீக ஒத்தாசையால் பிரசங்கிக்கிறவர் விசேஷித்ததும் இரட் சிப்பை விளைவிப்பதுமான பிரசங்கித்த லாகும். இந்த அபிஷேகமில்லாமல் உண்மையான ஆவிக்குரிய விளைவுகள் ஏற் படுவதில்லை. பிரசங்கித்தலின் விளைவுகளும் விசைகளும் சுத்திகரிக் கப்படாத பேச்சுக்கு மேலான விளைவு களைத் தருவதில்லை. அபிஷேகமின்றி பீடம் வலிமையற்றது. இதன்றி சுவிசேஷம் தன்னை அறிவிப்பதற்கு எந்த வலிமையுமுடையதல்ல. இதுவே தெய்வீக முத்திரை. பிரசங்கிக்கிறவரி லுள்ள அபிஷேகம் சுவிசேஷத்தின் மூலம் தேவனை வெளிப்படுத்தும்.

நமக்கு சத்தியங்களை சந்திக்கும் தைரியம் வேண்டும். தீர்க்கர்கள் அப் போஸ்தலர்கள், மற்றும் சத்தியத்தை எடுத்துரைத்தவர்களுடன் நமது உயரம் குறைவாகவும் சுருங்கியும் காணப்படு கிறது. நமக்கு தேவ வல்லமையைப் பற்றிய அறிவே இல்லை - அது மனித சக்திகளை உயர்மனித பணியைச் செய்ய அனுமானத்தை சார்ந்திருக்கிறது.

வேதவசனத்தைப் போதிக்க முயற்சிப்பதும், உயிர்த்தெழுந்த இரட்ச கரின் வாழ்வைப் பிறருக்குப் பகிர்ந்தளிப் பதும் தூய ஆவியானவரின் ஒத்தாசை யின்றி நடைபெறாது. சோர்ந்து போன நண்பர்களே, மற்றவர்களுக்கு சாட்சியா யிருக்கவும், சுயத்தையும், பாவத்தையும் மேற்கொள்ளவும், வெற்றிநடைபோட வும் ஒரு அதிசயம் தேவை - **அது *தேவனு டைய சால்வையால்* நீங்கள் போர்த்தப்பட்டு அவரது வல்லமையால் நிரப்பப்பட வேண்டும்.**

கட்டளையிடப்பட்டதும் தரிப்பிக்கப்பட்டதும்

சேவை செய்வதற்கு தூய ஆவி யானவர் மிக அவசியம் என்று வேத வாக்கியம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு வசனமும் "**பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தி னாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார்**" (சகரி.4:6) என்று சாட்சியாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் வல்லமையுள்ள தேவ மனிதர், முற்பிதாக்கள், விடுதலையாளர்கள், இரட்சகர்கள் அனைவரும் கட்டளை பெற்று தரிப்பிக்கப்பட்டதும் வீரமாய் தலைமைத்துவத்தில் வழிநடத்தவும் அனுகூலமாயிருந்தது தேவனுடைய ஆவியானவரே.

மோசே முதலாவது தன் சிருஷ்டி கரை எரியும் முட்செடியிலே பார்த்து யெகோவாவின்கைத்தடியையும் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. அவன் நேபோ பர்வதத்தில் ஏற சமயமான போது தனது தூயகரத்தை உத்தமனான யோசுவா மீது வைத்தபடியால் அவன் ஆவியால் நிரப்பப்பட்டு தனது வெற்றி யுள்ள நடையை ஆரம்பித்தான்.

நியாயாதிபதிகளின் புத்தகம் சாதாரண மனிதர் அசாதாரணமான காரி யங்களை ***தேவனுடைய சால்வையைப்*** பெற்று செய்ததை விவரிக்கிறது. **ஒத்னி யேல், கிதியோன், எப்தா** போன்றவர்கள் ஆவியால் நிரப்பப்பட்டு இஸ்ரவேலின் சத்துருக்களை மேற்கொண்டனர். "**...அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினார்**" நியா.15:14. எனவே சிம்சோன் வெறுங்கைகளால் பெலிஸ்தர் களை சங்காரம் பண்ணினான். ஆனால் ஆவியானவர் அவனை விட்டு விலகிய போது, அவன் பெலவீனப்பட்டு உதவி யற்றவனானான். கீசின் குமாரன் சவுலின் மீது ஆவியானவர் இறங்கிய போது "**...தீர்க்கதரிசனம் சொல்லி வேறு மனுஷனா னான்**" 1சாமு.10:6. அந்த ஆவி விலகின போது அவன் சாதாரண மனிதனானான். தாவீது சாமுவேலின் கைகளால் தைலக் கொம்பினால் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். தூய ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்ட அவன் "**அந்நாள் முதற் கொண்டு கர்த்தருடைய ஆவி யானவர் தாவீதின்மேல் வந்து இறங்கி யிருந்தார்**" 1சாமு.16:13.

இஸ்ரவேலின்தீர்க்கர்கள் மக்களை விக்கிரகாராதனையிலிருந்தும், பாவத்தி லிருந்தும் அழைத்து, ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி அழைத்தார்க ளெனில் அவர்கள் ஆவியால் நிரப்பப் பட்டிருந்தார்கள். "**ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருப் பதையும் அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருப்பதையும் கண்டான்**" ஏசா.6:1. ஏசாயாவின் உதடுகள் பீடத்தி லிருந்து எடுக்கப்பட்ட அக்கினித்தழலால் தொடப்பட்டன. எரேமியாவின் வாய் ஜீவனுள்ள தேவனுடைய கரத்தால் தொடப்பட்டது. "**நானோ யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய**

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவி அருளிய பலத்தினாலும் நியாயத்தினாலும் பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்'' மீகா.3:8. இவையெல்லாம் தேவனுடைய போர்வைகள்.

ஆவியானவரும் சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்தலும்

முற்கால பக்தர்கள் அபிஷேகத்தைப் பெற்று தைரியத்தோடும் வல்லமையோடும் கற்பனைகளையும் நியாயத் தீர்ப்பையும் கூறினார்கள் என்றால் நாம் எவ்வளவு அதிகமாக தூய ஆவியின் மேல்சார்ந்து, தைரியத்தோடும் பயனளிக்கும் விதத்திலும் தேவனுடைய நித்தியமான கிருபையின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்?

கிறிஸ்துவின் வாழ்வில் தூய ஆவியானவர் முக்கியமானவராக இருந்தார். அவருடைய மகிமையின் அவதாரம், பாவமில்லாய்மை மற்றும் சர்வ சக்தியாவும் அமைதலாக அவருக்குள் அடங்கிக் கிடந்தன. அவர் யோர்தான் நதியின் ஞானஸ்நானம் பெற்றபோது தேவ ஆவியானவர் அவர்மேல் இறங்கினார். ஆவியால் நிறைந்தவராய் அவர் வனாந்தரத்தில் சென்று பிசாசை வென்றார். அந்த ஆவியின் பலத்தினாலே அவர் தனது பகிரங்க ஊழியத்தை செய்யத் திரும்பினார்.

நாசரேத்தில் அவருடைய ஆரம்ப செய்தி

''**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்...**'' லூக்.4:18. இந்த வார்த்தைகள் பாவமற்ற உதடுகளிலிருந்தும் தெய்வீக இதயத்திலிருந்தும் பிறந்தன! இதே சுவிசேஷம் நமது பாவ வாய்களிலிருந்தும் ஊழல் நிறைந்த இருதயத்திலிருந்தும் தூய ஆவியானவரின் அபிஷேகமின்றி பிறக்கின்றன.

சபை சரித்திரம் தெய்வீக வல்லமையை விளக்குகிறது. இந்த தேவனுடைய போர்வை சீஷர்களின் மேல் விழுந்தபடியால் அவர்கள் மாறுதலடைந்து பலவீனமானதும் பயம் நிறைந்தவர்களுமாகிய அவர்கள் கிறிஸ்துவின் ஜீவனுள்ள சமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்று உலகத்தைத் தலைகீழாக மாற்றினார்கள். தூய ஆவியானவர் அவர்கள் மேல் இன்னும் அதிக வல்லமையோடு இறங்கி பலமாக இணைந்து உயிர்த்தெழுந்த இரட்சகர் அவர்களில் வாசம் பண்ணி அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையால் நிரப்பினார்.

பணியின் மகத்துவமும் மகிமையும்

யூஜின் பர்னான்டு என்ற கலைஞன் வரைந்த ஒரு முக்கிய ஓவியம் ஆண்டவர் தமது கரத்தை உலகத்தின் பரந்த அறுவடை நிலத்தைக் காண்பிப்பதாயிருந்தது. அவருடைய அன்பான சீஷன் இளைஞனாகவும் மெல்லியவராகவும் எஜமானுக்கு அருகில் கலங்கிய கண்களோடு எதிர்கால நோக்கத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அடிக்கடி நாம் கேட்கிற வசனம்: ''இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' யோவா.4:35. ''**நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்**'' மாற்கு 15:16. ஆனால் ஆண்டவராகிய எஜமான் தன் சீஷர்களைப் பார்த்து பணியின் மகத்துவத்தையும் மகிமையையும் கண்டு அவரது போர்வையை தமது தோள்களிலிருந்து யோவானுடைய மெல்லிய தோள்களின் மீது விழுந்து மூடுகிறது.

ஓவியன் இந்த சிறந்த சத்தியத்தைப் படமாக்கினான். யோவான் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்ற தயாராக இல்லை. ஆனால் சர்வவல்லவருடைய கரமும் இரட்சகரின் சால்வையும் அரசருடைய ஸ்தானாபதியாக அவனை ஆக்கிற்று. எனவே இடிமுழக்கத்தின் மகன் அன்பின் குமாரனாகவும், உத்தமமும் உண்மையுமுள்ள சாட்சியாகவும் கடைசி வரைக்கும் விளங்கினான்.

ஆவியானவர் ஊற்றப்படுதல்

அப்போஸ்தலனாகிய பேதுரு விசையுடனும் உணர்ச்சியுடனும் தன்னுடைய வாழ்வில் பெந்தெகொஸ்தே அனுபவத்தால் ஏற்பட்ட மாற்றத்தை நமக்கு கூறுகிறார். பெந்தெகொஸ்தேக்கு முன்னும் அதற்குப் பின்னும் பேதுருவின் வாழ்வில் காணப்பட்ட வேறுபாடு ஆச்சரியமானது. சீமோன் கேபாவாக மாறினான். அதாவது தைரியமான பாறை போல, உறுதியும் வல்லமையும் உடையவனாக மாறினான்.

பேதுருவின் விசுவாசத்தைக் குறித்து கேள்வி இல்லை. இயேசுவோடு இணைந்து வாழ்ந்த நாட்களில் ''**நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து**'' (யோவா.6:69) என்று அறிக்கையிட்டான். அவர் மேலிருந்த பயபக்திக்கும் எந்தக் குறைவுமில்லை. எஜமானைப் பின்பற்ற அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டவன். சிறைக்கும் மரணத்துக்கும் தன்னை ஒப்புக்கொடுத்தவன். தோட்டத்தில் அவருக்காக வைராக்கியமாக நின்றவன். தீர்மானத்திலும் நோக்கத்திலும் அவனது அன்பும் விசுவாசமும் பூரணமானவை.

ஆனால் எல்லா சூழல்களையும் சமாளிக்கும் ஆவிக்குரிய பெலன் அவனிடத்திலில்லை. அவனது போராயுதங்களில் பிளவுகள் இருந்தன. சிலவேளைகளில் அவன் தைரியம் இழந்து உதவியற்றவன் போல் நின்றான். எத்தனை வேளைகளில் நாமும் பேதுருவைப் போல குளிர்காயுமிடத்தில் நமது விசுவாசத்தைப் பரிகசிக்கிறவர்கள் முன்பு அமைதியாகவும் இந்த தேவனற்ற உலகுக்கு முன்பாக மறுதலிக்கிறவர்களாகவும் இருக்கிறோம்.

பரத்திலிருந்து கீழே அனுப்பப்பட்ட தூய ஆவியால் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷம்!

பேதுரு தேவனுடைய சால்வையால் போர்த்தப்பட்டவனாக மகிமையின் குமாரனைக் கொலை செய்தவர்களுக்கு முன்பாக பயமின்றி அவர்களது பயங்கர பாவத்தினைச் சுட்டிக் காண்பிக்கவும் இயேசுவை மேசியாவாகவும் ஆண்டவராகவும் பிரசங்கிக்க முடிந்தது. கடின இருதயங்கள் ''**சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?**'' என்று கேட்கும் அளவுக்கு அவனுடைய வார்த்தைகள் வல்லமையுடையவைகளாகவும், தைரியமாகவும், ஊடுருவிச்செல்லக்கூடிய வைகளாகவும் இருந்தன.

ஒருநாள் தூய அக்கினி பரத்திலிருந்து அவன் மீது விழுந்தது. அது அவன் சிலுவையிலறையப்பட்டு இரத்த சாட்சியாக மரிக்குமட்டும் அவனை வலுப்படுத்தியது. அவனுடைய எளிய சாட்சியைப் பாருங்கள்: ''**பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது**'' 1பேது.1:12.

''சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது, ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்தில்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும், என் பிரசங்கமும், மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது'' 1கொரி.2:1-5. அவரது தலைமுறையின் மிகச்சிறந்த கல்வியாளர்கள் அவரது ஞானத்தினை குறைவாக மதிப்பிட்டாலும் திறமைமிக்க தர்க்கவாதிகள் அவரது தர்க்க சாஸ்திரத்தை உதாசீனம் செய்தாலும் தீவிரமான ஆவிக்கு அவரது பேச்சுத்திறமையில் நம்பிக்கை இல்லாமலிருந்தாலும், விசுவாசம் தேவவல்லமையில்தான் நிற்க வேண்டும், இரட்சகர் வெளிப்படும்படி சுயம் சிலுவையிலறையப்படவேண்டும், அப்போதுதான் ஆவியின் வல்லமை வெளிப்பட முடியும். நாம் நமது பழைய ஆடைகளாகிய மாம்சத்தை எறிந்துவிட்டு பரலோக சால்வையைத் தரித்துக்கொள்ள வேண்டும்.

தூய ஆவியை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்

தூய ஆவியானவரின் பலத்த கிரியைகள் தொடருகின்றன. திரும்பத் திரும்ப ஜீவனுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் மீட்பின் அவசரம் என்ற யோர்தான் நதிக்கரையில் நின்று ''**எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே?**'' என்று கதறியிருக்கிறார்கள். பின்பு தங்கள் மனித திறமைகளை அகற்றிவிட்டு விசுவாசத்தால் எலியாவின் ஆவியையும் வல்லமையையும் பெற்றிருக்கிறார்கள்.

தேவனுடைய சால்வை சவோனரோலா என்ற துறவி மீது விழுந்தபடியால் பொல்லாத பிளாரன்ஸ் நகரம் தெய்வீக நியாயத்தீர்ப்பால் சந்திக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசங்கித்தவரின் வார்த்தைகள் நெருப்பு போல பற்றி எரிந்தபடியால் பெலத்த மனிதர்கள் பேராலயத்தின் கற்தூண் களில் தங்கள் முகத்தை வைத்து மன்னிப் புக்காகக் கதறி அழுதனர்.

உட்டெம்பெர்க் என்னுமிடத்தில் வாழ்ந்த துறவி ***தேவசால்வையால்*** போர்த்தப்பட்டபடியால் அவர் ஒரு சம்மட்டிபோல தேவகரத்தில் பயன்படுத் தப்பட்டு ஐரோப்பாவிலுள்ள மில்லியன் கணக்கான மக்கள் மூடநம்பிக்கையிலும் இருளிலுமிருந்து விடுவிக்கப்பட பயன் படுத்தப்பட்டார். **ஜான் வெஸ்லி**யின் இருதயத்தை தூய ஆவியானவர் அற்புத மாக அனல் மூட்டினபடியால் ***வெஸ்லி யன் எழுப்புதல்*** என்ற பெரிய ஆவியின் மறுமலர்ச்சி ஏற்பட்டது. தேவ ஊழியர் **முடி** வல்லமையின் ஆவியால் நிரப்பப் பட்டபடியால் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் மிகப் பெரிய ஊழியம் நடந்தேற ஏதுவாயிற்று.

சபை சரித்திரத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்போது அல்லது சமகால ஏடுகளைப் பார்க்கும் போது எலியா போல வல்லமையான ஊழியக் காரர்களை நாம் காணலாம். அவர்கள் அனைவரும் உன்னதத்தின் பெலனால் தரிப்பிக்கப்பட்டார்கள்.

இவைகளைக் குறித்துப் பேசுகிற நானும் ***தேவசால்வையால்*** போர்த்தப்பட் டிருக்கிறேன். இந்த நாளில் நாம் ஒன்றி ணைந்து பரலோக ஸ்நானத்தைப் பெற்று வல்லமையால் நிரம்புவதால் நம்மி லிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் புறப் படட்டும்! தேவ வாக்குத்தத்தங்களைக் குறித்து ஏன் நாம் பயப்பட வேண்டும்? இத்தனை தேவையான வாக்குத்தத்தத்தை நாம் பெற ஏன் தாமதிக்க வேண்டும்?

வல்லமையைப் பெற தேவையான நான்கு காரியங்கள்.

முதலாவது இன்றியமையாத தேவையால் பிறக்கும் விடாமுயற்சி. எலியாவின் இந்த சீடன் எதற்கும் பின் வாங்காமல் தீர்மானத்தோடு அவனைப் பின்பற்றினான். கில்கால் மட்டும் பின்தொடர்ந்த அவன் எஜமான் இப்படி சொல்கிறான்: "**நீ இங்கே இரு, கர்த்தர் என்னைப் பெத்தேல் மட்டும் போக அனுப்பு கிறார் என்றான். அதற்கு எலிசா: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும், உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகி றேன் என்றான். அப்படியே இருவரும் பெத்தே லுக்குப் போனார்கள்**" 2இராஜா.2:2. பெத்தேலிலும் எரிகோவிலும், யோர்தா னிலும் அதே நிலைத்தன்மைதான் தொட ருகிறது. எந்தக் கேலியும் விவாதமும் அவனை விலக்க முடியவில்லை.

இந்த மனநிலையைத்தான் தேவன் விரும்புகிறார். "**... அவன் என்னை நீர் ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன் என்றான்**" ஆதி.32:26. எவ்வளவு தூரம் பிரயாணம் பண்ணவேண்டியிருந் தாலும், எவ்வளவு அதைரியம் கொடுக் கப்பட்டாலும் என் இருதயம் உறுதியா யிருக்கிறது. எனது முகம் ஒரே நோக்கமா யிருக்கிறது; எனது சித்தம் தீர்மானத் தோடிருக்கிறது என்று சொல்ல வேண்டும். பணிக்குத் தேவையான வல்லமை எவ்வளவு என்று அறிந்து அதைத் தேடுவேன்.

இரண்டாவதாக துணிந்து ஆச்சரி யமான காரியங்களைக் கேட்கிற ஜெபம். மனித பெலவீனங்கள், உள்ளான சீர்கேடுகள் இருந்தாலும் இருதயம் தெய்வீக இரக்கத்தை நாடி, தேவ னுடைய வாக்குத்தத்தங்களை உறுதி யாகப் பிடித்துக் கொண்டு இரவும் பகலும் இரட்சகரை நோக்கி "**உமது ஆவியை எனக்குத் தாரும்**" என்று கூப்பிட வேண்டும்.

மூன்றாவதாக ஆயத்தமாகுதல். இதன்மூலம் பழைய சுயமும் அதின் எல்லா ஆடைகளும் அகற்றப்பட வேண்டும். வேத புத்தகத்தில் ஒரு வினோத பழக்கம் ஆடைகளைக் கிழிப்பது. சிலவேளைகளில் அது கோபத்தினால் செய்யப்படுகிறது, அல்லது தாழ்மைக்கு அடையாளமாக வோ, வெட்கம், துக்கம் என்பவைகளுக் காகவோ கிழிக்கப்படலாம். சிலவேளை களில் பழைய ஆடைகள் நன்றாக பயன்படுத்தப்பட்டதால் இனி பயன்பட முடியாமலாகியிருக்கலாம்.

இந்த நிலையில் எலிசாவுக்கு தேவமகிமையின் ஒரு கணநேரகாட்சி கொடுக்கப்படுகிறது- அக்கினி இரதங் களும் குதிரைவீரரும்! இந்த மகிமையின் காட்சி மகத்துவமும் பரம வல்லமையு மாயிருந்தபடியால் தனது சொந்த ஆடைகள் அழுக்கான கந்தையாகக் காட்சி அளிக்கின்றன. முடிவற்ற பரிசுத் தத்தையும் தேவவல்லமையும் ஒரு நொடி பொழுது கண்டபோது அவன் தன்னைக் குறித்தும் தனது பொருட்கள் குறித்தும் அதிருப்தி அடைந்தான் 2இராஜா.2:11,12.

தேவ மகிமையை இயேசுகிறிஸ்து வின் முகத்தில் நெடுநேரம் பார்க்கும் போது நாம் நமது பரிதாபமான தகுதியற்ற ஆவிக்குரிய நிலை, பேரளவிலான அர்ப்பணம், மாம்சத்தின்மேல் எவ்வகை நம்பிக்கை வைத்திருக்கிறோமோ எல்லா வற்றையும் கிழிக்க ஆயத்தமாகிவிடு வோம். தேவனுடைய தூய பிரசன்னத் தின் வெளிச்சத்தில்தான் நமது சுயத் தையும் பாவத்தையும் நாம் கண்டு அவற்றை விட்டுவிட வாஞ்சிப்போம்.

இறுதியாக விசுவாசத்தை ஒத்துக் கொள்ள வேண்டும். அதனால் தேவ ஆவியானவரின் வாக்குகளைப் பயிற் சிக்க முடியும். கடந்த காலங்களில் மக்களை தேவ ஆவியானவர் சந்தித்து பலத்த காரியங்களை நடப்பித்தது போல இந்த நாட்களிலும் மக்களை சந்தித்து பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்காக நாம் நம்மையும், நமக்குள்ள யாவற்றையும் இரட்சகராகிய இயேசு வின் முன் படைத்து '**ஆண்டவரே, இன்னொரு முறை எங்களைத் தம்முடைய ஆவியால் நிரப்பும்**' என ஜெபிப்போம்.

ஆவியானவரை துக்கப்படுத்துதல்

Grieving the spirit

Andrew Murray

"**அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக் கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்**".

தூய ஆவியானவர்தான் ஒரு தேவபிள்ளையை முத்திரை போட்டு, வேறுபடுத்தி, தேவனுக்குச் சொந்தமென அடையாளப்படுத்துகிறார். இது முடிந்து போனதும் வெளிப்படையானதும் மரித்துப் போனதுமான செயலல்ல, இது உயிருள்ள ஒரு நடைமுறை. அது ஜீவனுள்ள ஆவி நம்மிலிருக்கும்போது ஆத்துமாவுக்கு வலிமையையும் விசுவா சத்திற்கு உறுதியையும் அளிக்கிறது. இதனால் நாம் அவரை துக்கப்படுத்தவே கூடாது. நீங்கள் பிள்ளைகளென்ற உரிமையை சந்தோஷமான உரிமையை ஒவ்வொரு நாளும் வைத்திருக்கிறீர்கள். முழு ஆசீர்வாதமும் உங்களுடையதா யிருக்கிறது. இந்த ஆவியானவரே நம்மை வழிநடத்தி, நாம் தேவபிள்ளை கள் என்பதை நமது ஆவியால் சாட்சி யிடுகிறார்.

ஒருவர் எப்படி ஆவியானவரை துக்கப்படுத்த முடியும்? பாவம் செய்வ தால் என்பதுதான் பதில். அவர் தூய ஆவியானவர். நம்மை சுத்திகரிக்கிறவர். அவருடைய இரத்தம் நம்மைக் கழுகி தேவனுடைய தூய ஜீவனால் நம்மை நிரப்பி அதாவது தேவனாலேயே நம்மை நிரப்பிவிடுகிறது. தேவ வசனம் சில பாவங்களைக் குறிப்பிட்டு, நாம் அவை களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள அழைக்கிறது.

1. **பொய் சொல்லுதல்:–** பிசாசோடு தொடர்புபடுத்தி சொல்லப்படும் பாவம் இது. அது நரகத்திலிருந்து புறப்பட்டு நரகத்திற்கே செல்லுகிறது. தேவன் சத்தியத்தின் தேவன். நேர்மையற்றதும் சத்தியத்திற்குத் தீங்கு விளைவிப்பது மான ஒருவரில் தூய ஆவியானவர் அவரது ஆசீர்வாதமான பணியை நிறை வேற்ற முடியாது. பொய் சொல்வதைக் குறித்தும் பொய் சொல்லுகிறவர்களைக் குறித்தும் தேவன் சொல்லுவதைக் கவனமாகக் கேட்போம். சத்தியத்திற்கு எதிரான எதையும் பேசாதபடி தேவன் உதவிசெய்ய ஜெபியுங்கள்.

2. **கோபம்:–** "**சகலவித கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது**" எபேசி.4:31. பொய்யு டன்கூடிய இன்னொரு பாவம் கோப மாகும். ஆத்திரம் கோபத்திற்கு வழி காட்டுகிறது. இது நம்மைவிட்டு அகல வேண்டும். தூய ஆவியானவரது மிகப் பெரிய வல்லமை உங்களிலுள்ளது. ஒவ்வொரு நாளும் சுயத்தை அடக்க உங்களில் வாசம் பண்ணுகின்ற தூய ஆவி யானவரிடம் விசுவாசத்துடன் கேளுங்கள். அவர் உங்களை சாந்தப்படுத்தி நிலை நிறுத்து வார். பிதாவின் வல்லமையில் நம்பிக்கை வையுங்கள். குமாரனும், பரிசுத்த ஆவியும் கோபத்தை மேற்கொள்ள உதவி செய்யட்டும். பாவத்தை அறிக்கை பண்ணுங்கள். தேவன் உங்களைக் கழுகி சுத்தப்படுத்துவார்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

3. களவு செய்தல்:– அயலானுடைய சொத்து, உடைமை இவற்றிற்கு எதிராகவும் வியாபாரத்தில் நேர்மையின்மை, ஏமாற்றுதல் ஆகியவற்றின் மூலம் எனது நன்மைக்காக அவர்களை செலவு செய்ய வைப்பதாகும். கிறிஸ்துவின் கட்டளைப் படி அன்பு எனக்கும் பிறனுக்கும் பயன் தரவேண்டும். பணஆசை, பொருளாசை, சொத்தின் மீதுள்ள ஆசை நமது சுய நன்மையை நாடும் செயல்களாகும். அது தூய ஆவியானவருக்கு தூரமானது. எனவே கிறிஸ்தவன் நேர்மையுள்ளவனாகவும், நீதி செய்கிறவனாகவும், அயலானை தன்னைப் போல நேசிக்கிறவனாயுமிருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல்: **"கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள்"** (எபேசி.4:29) என்கிறார். தேவ பிள்ளையின் நாவு கர்த்தருக்குரியது. அவன் அவனது பேச்சினால் அறியப்பட வேண்டும். அவனது பேச்சால் ஆவியானவரை சந்தோஷப் படுத்தவோ, அவரை துக்கப்படுத்தவோ கூடும். சுத்திகரிக்கப்பட்ட நாவு அயலாருக்கு மட்டுமல்ல பேசுகிறவனுக்கும் ஆசீர்வாதமாகும். அருவருப்பான பேச்சு, சோம்பலான வார்த்தைகள், புத்தியீனமான, வேடிக்கைப்பேச்சு போன்றவை ஆவியானவரை துக்கப்படுத்தும். அவை தூய ஆவியானவர் சுத்திகரிக்கவும், ஆறுதல்படுத்தவும், இருதயத்தை அன்பால் நிரப்பவும் கூடாமலாக்கி விடும்.

இளம் கிறிஸ்தவரே, தயவுசெய்து இப்படிப்பட்ட பாவங்கள் அல்லது வேறு எந்தவித பாவங்களினாலும் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். பாவம் செய்து விட்டால் அறிக்கையிடுங்கள். தேவன் உங்களுக்கு மன்னித்து உங்களை கழுகி சுத்தப்படுத்துவார். நீங்கள் தூய ஆவியால் முத்திரை செய்யப்பட்டவர்கள். விசுவாசத்தின் உறுதியிலும் சந்தோஷத்திலும் நடக்க, விரும்பினால் **"தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்"** என்ற வார்த்தைக்குச் செவி கொடுங்கள்.

அன்புள்ள தேவனே, என் பரம பிதாவே, தூய ஆவியானவரை என் உள்ளத்தில் தந்து, எத்தனை பெரிய கிருபையைத் தந்திருக்கிறீர் என்பதை நான் புரிந்து கொள்ளட்டும். இந்த விசுவாசம் என்னை எல்லாப் பாவத்திலிருந்தும் விடுவிக்கும் வல்லமையும் விவாதமாகவும் இருக்கட்டும். தூய இரட்சகரே, எனது சிந்தனையிலும், பேச்சிலும், செயலிலும் எல்லா வற்றிலும் என்னில் உமது சாயல் காணப்படும் ஆமென்.

ஆவியானவரின் மகிமையான ஊழியம்

The glorious ministry of the spirit

John Willison

"ஒழிந்து போகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு மகிமையுள்ளதாயிருக்கும்? ஆக்கினைத் தீர்ப்பு கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே" 2கொரி.3:8,9.

இதை வாசிக்கிற யாவரும் தேவனிடத்தில் உத்தமமாக ஜெபித்து முற்காலம் போல ஆவியின் ஊழியம் நடைபெற ஜெபிக்கச் சொல்வோமாக. சபையோடு சேர்ந்து, புலம்பல் 5:21-ல் வாசிக்கிறபடி **"... பூர்வ காலத்தில் இருந்தது போல எங்கள் நாட்களை புதியவைகளாக்கும்"** என்று ஜெபிப்போம். தாவீது ஜெபித்த படி **"உமது பரிசுத்த ஸ்தலத்தில் ... உமது வல்லமையையும், உமது மகிமையையும் கண்டேன்"** சங்.63:2. ஏசாயாவைப் போல, **"எழும்பு, எழும்பு, பெலன் கொள்; கர்த்தரின் புயமே முந்தின நாட்களிலும், பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினபடி எழும்பு"** ஏசா.51:9. சபையோடு சேர்ந்து "தேவனே எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வ நாட்களில் நீர் நடப்பித்த கிரியைகளை அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள், அவைகளை எங்கள் காதுகளால் கேட்டோம் .... ஆண்டவரே விழித்துக் கொள்ளும், ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும்; என்றைக்கும் தள்ளிவிடாதிரும்; ... எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும்; உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்" சங்.44:1,23,26.

நாங்கள் கப்பற் பாய்க்கு காற்றுப் போலவும், சக்கரங்களுக்கு எண்ணெய் போலவும், ஆத்துமாக்கள் களைத்துப் போகாமல் தேவனுடைய கற்பனைகளில் ஓடவும் செய்வோம். அது எங்களது கட்டுகளைத் தளர்த்தும்; இதயங்களை விசாலப்படுத்தும்; சாத்தானுடைய சோதனைகளிலிருந்து விடுவிக்கும். சோர்ந்த ஆத்துமாக்களை அது எழுப்புதலடையச் செய்து, அவர்கள் தண்ணீரை திராட்சரசமாகவும், துக்கத்தை சந்தோஷமாகவும், பயங்களை தூய நம்பிக்கையாகவும் சந்தேகங்களை தெய்வீக உறுதியாகவும், பராதுகளை துதிகளாகவும் மாற்றி கர்த்தரின் வழிகளில் பாடச் செய்வார். ஆத்துமாக்கள் நிணத்தினாலும் கொழுப்பினாலும் திருப்தியாக்கப்பட்டு, மனம் ஒளியூட்டப்பட்டு, சித்தம் விடுதலை பெற்று, ஞாபகத்திற்கு பெலனும், மனசாட்சிக்கு சமாதானமும், அனைத்து கிருபைகளும் வாழ்வுக்கு அளிக்கப்படும். அது ஆத்துமா கிருபையில் வளரவும், பரலோகம் செல்ல விரைவாக முதிர்ச்சி அடையவும் செய்யும். மார்க்க விரிவுரையாளர்கள் தங்கள் கடமையில் அதிக உண்மையாயிருக்கவும், ஜெபத்தில் அதிக தீவிரமாகவும், கேட்பதற்கு கவனமாகவும், தியானிப்பதில் சிரத்தையோடும், அறிவில் செயல்பாடுள்ளவர்களாகவும் மிகுந்த தாழ்மையுடனும் மற்றும் பெற்றுக் கொண்ட இரக்கங்களுக்காக நன்றியுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

ஆவியால் செய்யப்படும் ஊழியத்தின் மூலம் அரிதான ஐசுவரியமான ஆசீர்வாதங்கள் வரும். அதாவது மீட்பரின் மகிமையின் கண்டுபிடிப்புகள், பாவம், கொடுமை, தீமை ஆகியவற்றின் உணர்வு, வெற்றியின் அனேக கிரீடங்கள், கிறிஸ்துவின் வெற்றி இவையெல்லாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்குக் கிடைப்பவையாகும். சுவிசேஷ ஒளி தெளிவாக வீசி இரட்சிப்பின் அறிவு பெருகி, அறிவீனம், தவறு போன்றவை மறைந்து இலவச கிருபை அதிகமாக வெளிப்படும். சாத்தான் கட்டப்படுவான். ஊழியக்காரர்களும் உற்சாகமடைவார்கள். பாவிகள் விழிப்படைவார்கள். மரித்த ஆத்துமாக்கள் பிழைக்கும், கடின இருதயங்கள் உருகும். உறுதியான இச்சைகள் அடங்கும். தேவனுக்கு பிள்ளைகளாக அனேகர் மாறுவார்கள். எல்லாரும் இணைக்கப்பட்டு ஒருமனமாவார்கள். பரலோகம் இறங்கி வந்தது போல காணப்படும். ஜெபம், துதி, ஆவிக்குரிய சம்பாஷனை கிறிஸ்துவைப் பற்றிய சம்பாஷனை இவையே முக்கிய சந்தோஷமாயிருக்கும்.

ஜெயிங்கள்
தமிழ்நாடு சட்டசபைத்
தேர்தல் நாள் **23.04.2026**

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- இரத்தச் சாட்சிகளின் **கடைசித்துளி** இரத்தத்தைக் கண்டுகளிக்கிறோம். நமது இரத்தத்தின் **முதல் துளியையோ** கவனமாகக் காத்து கொள்ளுகிறோம்!
- எலியாவைப் போல் நாமும் **சாதிக்க** விரும்புகிறோம். ஆனால் அவனைப் போல் **துன்பங்களைச்** சகிக்கவோ விரும்புவதில்லை!
- சோர்ந்து போன நண்பர்களே மற்றவர்களுக்கு சாட்சியாயிருக்கவும், சுயத்தையும், பாவத்தையும் மேற்கொள்ளவும், வெற்றி நடை போடவும் ஒரு **அதிசயம்** தேவை-அது தேவனுடைய சால்வையால் நீங்கள் போர்த்தப்பட்டு அவரது வல்லமையால் நிரப்பப்படவேண்டும்.
- இன்று சபையில் ஆலோசனை கூறுவோரின் எண்ணிக்கை அளவுக்கு **அழுது** புலம்புவோர் இருந்தால் ஓராண்டிற்குள் **எழுப்புதல்** வந்துவிடும்!
- இருதயத்தில் தாகத்தையும், கண்களில் தரிசனத்தையும் பாதுகாக்க கூடிய இடம் ஒன்றே-அதுதான் **ஜெபப் பலிபீடம்.**

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason